★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55[illegible]

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 30உ செவ்வாய் (12—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 31உ புதன் (13—6—56) [இதழ் 808

நாட்டுச் செக்குகளுக்கு நெருக்கடி!

ஷோலாப்பூர், ஜூன் 10

"எண்ணெய் ஆலைகள் ஏற்பட்ட பின்னர் நாட்டிலுள்ள 4 இலட்சம் நாட்டுச் செக்குகளில் பாதி, வேலையின்றி, வீணே இருக்கிறது; மற்றப்பாதி செக்குகளுக்குப் போதியவேலை கிடைக்கவில்லை", என்று அனைத்திந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டு தலைவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுச் செக்குத் தொழிலில் வேலையில்லாக் கொடுமையை ஒழிக்க, புதிதாக ஆலைகள், 'எக்ஸ் பெல்லர்'கள், 'ரோட்டரி'கள் நிறுவ அனுமதி கொடுக்கக் கூடாதென போர்டு சிபாரிசு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'திராவிடஸ்தான் இயக்கத்தை அலட்சியப்படுத்தாதீர்'

தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோக வழக்கு விசாரணை

அரசாங்கத் தரப்பில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்; தோழர்களின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை; வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

பிப்ரவரி 20-ல், தம்மம்பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக வழக்கு, 9-6-56-ல் ஆத்தூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரசாங்க தரப்பில் சாட்சியாக இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ண அய்யர் 1¼ மணி நேரம் விசாரிக்கப்பட்டார்.

நம் தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் செட்டோ எதிர் வாதம் செய்தார்.

வழக்கறிஞர் செட்டோவின் குறுக்கு விசாரணையின்போது, சாட்சி கூறியதாவது:—

"திராவிட முன்னேற்றக்கொடியைப் பார்த்திருக்கிறேன்; அக்கொடியின்மேல் பாகத்தில் கருப்பு நிறத் துணி இருக்குமோ சிவப்பு நிறத்துணி இருக்குமோ என்று எனக்குத் தெரியாது' என இன்ஸ்பெக்டர் பதிலளித்ததும் கோர்ட்டில் பலத்த சிரிப்பு எழுந்தது.

பின்னர், மாஜிஸ்திரேட், வழக்கை மீண்டும் 16-6-56-ந் தேதியன்று ஒத்திவைத்தார்.

வழக்கை கவனிப்பதற்காக சேலம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், பொருளாளர் குப்புசாமி, எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., கே. எஸ். மணி எ. நாச்சிமுத்து, மா. மணி மற்றும் பல தோழர்களும் பொதுமக்களும் கோர்ட்டில் கூடியிருந்தனர்.

தனித் தெலிங்கானா அமைப்புக் கிளர்ச்சி

அர்த்தமில்லையென்கிறார் காங்கிரஸ் தலைவர்

மெஹபூப்நகர், ஜூன் 10—

"தெலிங்கானா மக்கள் சித்தரஞ்சன் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் இயந்திரங்களையும் வடக்கே தயாரிக்கப்படும் உப்பையும், மைசூர் மாநிலத்திலிருந்து பாயும் துங்கபத்திரா நதியின் தண்ணீரையும் எதிர்நோக்கியிருக்கையில், தெலிங்கானா தனித்து இயங்க வேண்டும் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை,"

என்று, காங்கிரஸ் தலைவர் தேபர் மெஹபூப்நகர் நகரசபை வரவேற்புக்குப் பதில் கூறுகையில் குறிப்பிட்டுள்ளார்.

முரணான செய்திகளைத் தடுப்பதற்குச் சட்டம்

கெய்ரோ, ஜூன் 11—

இல்லற வாழ்க்கையைச் சிதைத்துவிடக்கூடிய மணவிலக்கு, மணமான பெண்ணுடன் கள்ள நட்பு வைத்துக்கொள்ளுதல் ஆகிய செய்திகளை எகிப்து பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்று, ஒரு சட்டம் கொண்டுவரப்போகிறார்களாம். இந்தச் சட்டம் கொண்டு வருவது பற்றி அமைச்சரவை ஆராய்ந்ததாம்.

அழகிகள் போட்டிக்கு கடுமையான எதிர்ப்பு

அரசியல் அமைப்புக்கே முரணானதெனத் தீர்மானம்

பாகிஸ்தானில் அழகிகள் போட்டி நடத்துவதைப் பாகிஸ்தான் உலேமாக்கள் இயக்கம் கண்டித்திருக்கிறது.

இந்த மாதிரிப் போட்டிகள் கிழக்கத்திய சமூகப் பழக்கங்களுக்கே அவமானமென்றும், பாகிஸ்தானின் இஸ்லாமிய அரசியல் அமைப்புக்கு முரணானதென்றும் அவர்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

ஜூன் 30-ம் நாள் கராச்சியில் நடைபெறுவதாயிருக்கும் 'மிஸ் பாகிஸ்தான்' போட்டியைத் தடை செய்ய வேண்டுமென்றும் அரசியலாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

'அதன் விளைவுகளை மக்களுக்கு விளக்கிக் கூறுங்கள்'

'வகுப்புவாதத்தில் விழுந்துவிடாது காத்துக்கொள்ளுங்கள்'

'இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்க விரும்பும் வெளியார் தூண்டுதல் இருக்குமோ?'

அனந்தசயனம் அய்யங்காரின் விஷமச் சேட்டை!

சென்னை, ஜூன் 12—

"இவ்வியக்கம், இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைப்பதில் ஆர்வம் கொண்டிருக்கும், நாட்டுக்கு வெளியே உள்ளவர்களின் தூண்டுதலாக இருக்குமோ என நான் ஐயுறுகிறேன்."

இத்தகு நச்சுக் கருத்தை, மக்கள்சபைத் தலைவராக இருந்துவரும் சித்தூர்-அனந்தசயனம் அய்யங்கார் அறிவித்துள்ளார்.

மைலாப்பூரில் உள்ள சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்பொழுது நச்சு நாபடைத்த அனந்தசயனம் அய்யங்கார், மேற்படி திராவிட நாடு இயக்கம் குறித்து சில பேசியுள்ளார்.

அக்கூட்டத்திற்கு, முன்னாள் சட்டசபை காரியதரிசியாக இருந்துவந்த ஆர். வி. கிருஷ்ண அய்யர் தலைமை வகித்தார்.

மேலும் அவர் பேச்சையில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட நாடு கோரிக்கை பிரச்சாரம், இந்தியாவின் ஐக்கியமின்மைக்கும், சீர்குலைவுக்கும் விதைக்கப்படும் வித்தாகும். இக்காலத் தேவையாக இருக்கிற நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு இளைஞர்கள் உழைக்க வேண்டும்.

"வகுப்பு வெறி வலையில் விழுந்துபடாமல் இளைஞர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

"திராவிட நாடு இயக்கத்தை அலட்சியப்படுத்தக்கூடாது.

"இறுதியாக இந்தியாவைப் பிளவுபடுத்துவதில் வந்து முடிவுறும் என்ற உண்மையை, பொதுமக்களிடம் விளக்கிக் கூறி, திராவிடஸ்தான் தலைவர்களின் சொல்லுக்கு அவர்கள் செவி சாய்க்காமல் இருக்கும்படி செய்வது வாலிபர்களின் நீங்காக் கடமையாகும்."

காங்கிரஸ் கட்சியின் பதவிவெறி உச்சம் பெறுகிறது!

தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி தேடித்தர புதிய சதி

பலகட்சி கூட்டணி அமைப்பைக்குலைக்க புதிய சூழ்ச்சி

"உட்பகுதி, வட்டாரம், முழுநாடு ஆகிய எந்த எல்லை வரம்பு கொண்டு அரசியல் கட்சிகள், எதிர்காலத்தில் உருவாக்கும் தேர்தல் கூட்டை அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ள முடியாது. அவ்வாறு கூட்டு சேரும் கட்சிகள் ஒப்புக்கொள்ளப் பட்ட கட்சிகளாக இருந்தாலும், தாங்கள் கூட்டு சேரும் நோக்கத்தை முன்கூட்டியே அறிவிக்கப்படுவதாக இருந்தாலும், அத்தகைய தேர்தல் கூட்டை ஏற்க முடியாது."

இவ்வாறு, இந்திய அரசாங்கத் தேர்தல் துறை, அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

பெல்லாரி ஆந்திரத்திற்கா? கர்நாடகத்திற்கா?

கர்நாடகத்திற்கே என மக்கள் தீர்ப்பளித்துவிட்டனர்

முடிவு கிடைத்துவிட்டது! ஆந்திரர்-கன்னடர் பகையும் மறைய வேண்டும்!

பெல்லாரி, ஜூன் 11—

பெல்லாரி தொகுதியில் சட்டசபை துணைத் தேர்தல் நடைபெற்று இருக்கிறது.

பெல்லாரி மாவட்டம் முழுவதையும், மாகாண சீரமைப்புக் குழுவின் சிபாரிசுக்கு எதிராக, மைசூருடன் இணைத்து விட்டது, இந்திய அரசாங்கம்.

'அப்பகுதி ஆந்திரத்துடனேயே இணைந்திருக்க வேண்டும்; இந்திய அரசாங்கத்தின் தீர்ப்பு கண்டிக்கத்தக்கது' என்பதற்கு அறிகுறியாக, அத்தொகுதியில் சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஆந்திரர் கங்கப்பா, தனது சட்டசபை உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டார்.

'பெல்லாரி ஆந்திர மாகாணத்துடன் சேர வேண்டும்' என்ற பிரச்சினையின் மீது மக்கள் கருத்தறியும் நோக்கத்துடன், மீண்டும் துணைத் தேர்தலில் கங்கப்பா அபேட்சகராக நின்றார்.

'பெல்லாரி கர்நாடகத்திற்குத்தான் சொந்தமானது' என்பதை நிலைநாட்டும் கருத்துடன், ஆந்திர அபேட்சகரை எதிர்த்து சன்னபசவ கவுடா என்ற கன்னடர் தேர்தலில் போட்டியிட்டார்.

மக்கள் தீர்ப்பளித்து விட்டனர்; 'பெல்லாரி மாவட்டம் மைசூருடன்தான் இணைய வேண்டும்' என்பதற்குச் சாதகமாக அதிகப்படி வாக்குகளைத் தந்துள்ளனர், மக்கள்.

சன்னபசவ கவுடா, 31,708 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கங்கப்பா, 28,917 வாக்குகள் பெற்று தோற்றுள்ளார்.

எந்தத் துணைத் தேர்தலுக்கும் காட்டாத அளவு, அதிக முக்கியத்துவம் இந்தத் துணைத் தேர்தலுக்குக் காட்டி இருக்கிறது, இந்திய அரசாங்கம்.

இந்திய அரசாங்கத்தின் பிரதம தேர்தல் அதிகாரியே துணைத் தேர்தலைக் கண்காணித்து இருக்கிறார்.

எந்தத் துணைத் தேர்தலிலும் பதிவாகாத அளவிற்கு அதிகப்படியான வாக்குகள் இத்தேர்தலில் பதிவாகி இருக்கிறது.

பெல்லாரியின் எதிர்காலம் குறித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய வாக்காளர்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

பெல்லாரி மீது மைசூருக்குள்ள உரிமை நிலைநாட்டப்பட்டு விட்டது.

இந்த முடிவிற்கு இருசாராரும் கட்டுப்பட்டு, தங்களுக்குள் இருந்துவரும் உட்பகையை மறக்க முன்வர வேண்டும்.

அதுவே நீதி—முறை!

உருக்கை இறக்குமதி செய்ய முடிவு

நாட்டில் நிலவிவரும் உருக்குப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக, இந்தியப் பேரசினர், பெரும் அளவில் உருக்கை இறக்குமதி செய்ய எண்ணியுள்ளனர். இறக்குமதியாகும் உருக்கில் பெரும் பகுதி கல்கத்தா, பம்பாய், சென்னை [illegible]

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—6—'56 செவ்வாய்

கைகொட்டி நகையாரோ?

திராவிட நாடு—நமது கழகத்தின் அடிப்படை இலட்சியம்.

கழகத்தின் நடைமுறை அனைத்தும், அவ்வுயரிய இலட்சியத்தை அடைய மேற்கொள்ளப்படுபவைகளேயாகும்.

பொதுக்கூட்டம். மாநாடு, தனி விவாதம், ஏடெழுதல், சட்டமீறல், அறப்போர், தடியடிபடல், சிறை செல்லல், குறிப்பிட்ட பிரச்சினையில் மற்றக் கட்சிகளுடன் கூட்டுச்சேரல் ஆகிய செயல்முறை அனைத்தும, திராவிட நாடு இலட்சிய வெற்றிக்கு கைக்கொள்ளப்படும் புனித செயல்களேயாகும்.

அவ்வகையில் சேர்ந்திருப்பதுதான், கழகம் தேர்தலில் பங்குகொள்ளுவது என்றப் புதிய நடைமுறையும்.

தேர்தலில் கழகம் கலந்து கொள்வது என்பது, கழகத்தின் பெயரால் நிறுத்தப்படும் அபேட்சகர்களின் வெற்றி தோல்வியை மட்டுமே குறிப்பிடும் விஷயமன்று

குறிப்பிட்ட திராவிட நாடு இலட்சியத்தின் வெற்றிக்காக, தேர்தல் மூலமும் போராட முடியும் என்ற புதிய போர் முறையை வரையறுப்பது அல்லது உறுதி செய்வது என்பதே முழுதும் பொருத்தமுடையதாகும்.

தேர்தலில் கலந்துகொள்ள முன்வந்து இருக்கிறது என்பதினல், இலட்சிய வெற்றியைத் துரிதப்படுத்தக்கூடிய வேறு அறப்போர் முறைகளுக்குக் கழகம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது எனப் பொருளல்ல.

பிரச்சாரம், வழக்கம்போல், மேலும் கூடுதலாக நடைபெறும்.

கொள்கை விளக்கம், முன்னிலும் விரிவாகவும் ஆணித்தரமாகவும் எழுதப்பட்டுவரும்.

மாநாடுகள், பலப்பல கூட்டப்பட்டு மக்களுக்குக் கருத்து விளக்கம் மென்மேலும் தரப்படும்.

அறப்போராட்டங்கள், இன்றியமையா நிலையில் மிக மிகத் தீவிரமாகத் துவங்கப்பட்டே தீரும்.

அணி வகுப்பு பெருக்கப்படும்; விடுதலைப் படைக்கு நாட்டு மக்களைத் திரட்டுவது தொடர்ந்து நடைபெற்றுவரும்.

இப்பணிகள் எதுவும் தடைபடாது, கழகம் தேர்தலில் பங்குகொள்ளுவது எனத் தீர்மானித்துவிட்டக் காரணத்தால்.

தேர்தல், நமது இலட்சியத்தை விரைந்து அடைவதற்குரிய அறப்போர் முறைகளில் ஒன்று—வலிமையான ஒன்று—அவ்வளவுதான். அதைத் தவிர்த்து, அதற்கு நாம், இத்தருணத்தில், அதிக மதிப்புக் கொடுக்கவில்லை—கொடுக்கவும் முடியாது — கொடுக்கவும் கூடாது.

திராவிட நாடு இலட்சியத்தை விடுத்து கழகம் தேர்தலில் பங்குகொள்ளுவது என்ற பிரச்சினை எழுவதற்கே இடம் இல்லை—அதில் பொருளும் இல்லை.

நமது ஜீவ இலட்சியத்தைப் பெறுவதற்கே, நாம் தேர்தலை ஒரு கருவியாகக் கொள்ளத் தீர்மானித்து இருக்கிறோம்.

எவ்வகையிலும் திராவிட நாட்டைப் பெறுவது என்ற குறிக்கோளை நாம் கொண்டிருக்கவில்லையானல், தேர்தலைக் குறித்து நாம் கவலைகொள்ளத் தேவையே இருந்திருக்காது.

அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவிக்கவேண்டிய கட்டாயமும், அதைக் கட்டிவளர்க்கவேண்டிய இன்றியமையாமையும், நம்மில் எவருக்கும் இருந்திருக்க வேண்டிய அவசியம்கூட இருந்திருக்காது.

திராவிட நாடு இலட்சியத்திற்கு எத்தகைய சிறப்பு நாம் கொடுத்து இருக்கிறோமோ, அதில் அணுவளவும் குறைந்தில்லாத நிலையில் ஜனநாயகக் கோட்பாட்டிற்கும் தந்திருக்கிறோம்.

திராவிட நாடு காண்பதும் ஜனநாயக தத்துவம் ஒழுங்கான கடைக்காலின் மீது நிர்மாணிப்பதும் நமது பெருவிருப்பம்.

திராவிட நாடு இலட்சியம்—ஜனநாயகக் கோட்பாடு—ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும்.

ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்க முடியாது.

திராவிட நாடு தேவை என்பதற்காக, ஜனநாயகப் பண்பை—முறையை நமது கழகம் ஒதுக்கிவிடாது.

ஜனநாயகம் இன்றியமையாத் தேவை என்பதற்காக, திராவிட நாடு குறிக்கோளை நமது கழகம் கைவிட்டுவிடாது.

ஜனநாயக முறையின் துணைகொண்டு திராவிட நாட்டைப் பெறவும், பெற்றத் தாய்நாட்டில் ஜனநாயகத்தைத் தழைத்தோங்கச் செய்து மகிழவும், கழகம் தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ளது.

திராவிட நாடு உயிர் என்றல், ஜனநாயகம் உடல்; ஜனநாயகம் உயிர் என்பதானல் திராவிட நாடு உடல் போன்றது.

திராவிட நாட்டை விடுத்துக் கழகம் உயிர் வாழாது என்பது போலவே, ஜனநாயகத்தைப் புறக்கணித்துவிட்டும் கழகம் உயிர் வாழாது.

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, ஒரு ஜனநாயக எதிர்ப்பு முன்னணியை, மற்றக் கட்சிகளுடன் கூட்டாகச் சேர்ந்து உருவாக்கக்கூடிய வலிமையும், செயல் திறனும் நமது கழகத்திற்கு இருக்கிறது என்பதை, மாற்றுக் கருத்தினர்களைப் போன்றே, நாமும அறிந்தே இருக்கிறோம். அப்பெருண்மையில் நமக்கு எள்ளத்தனை அவநம்பிக்கையும் கிடையாது.

அவ்வாறு கூட்டுச் சேருவதில் கழகத்திற்கும முழு விருப்பம் உண்டு.

அத்தகு கூட்டு முயற்சியின் வினைவால் காங்கிரஸ் முறிவுறும் என்பதும் உண்மையாக இருக்கக்கூடும். ஆனல், அத்தகைய கூட்டைப்பெற, கழகம், தனது உயர்மூச்சான திராவிட நாடு இலட்சியத்தையா கைவிட முன்வரும்?

கைவிட முன்வருவது மகத்தான இலட்சியத் துரோகம!

நமது கழகத்திடம், அத்துரோகச் செயலை எதிர்பார்ப்பது, எள்ளத்தக்குரியது!

'கண்ணைக் கொடுத்து சித்திரம் வாங்கினல், கைகொட்டி நகையாரோ?'

கண்டிப்பாக எவரும் நகைக்கத்தான் செய்வர்!

உலகத்தின் கண்களுக்கு அன்று தெரியாதிருந்தது நமது இலட்சியம்

இன்று உலகத்திலுள்ள அனைவரையும் கவருகிற வலிவையும்—பொலிவையும் பெற்றிருக்கிறது

சில்லறைச் சூழ்ச்சிகளால் பெரியமுயற்சியை சீர்குலைத்துவிட இயலாது

ஈ. வெ. கி. சம்பத் இலட்சிய முழக்கம்

திருச்சியில் நடைபெற்ற தி. மு கழக மாநாட்டில், தோழர் ஈ. வெ கி சம்பத் அவர்கள், 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுகையில், தி. மு. கழகத்தின் நிலைபற்றிக் குறிப்பிட்டதாவது :—

"இன்று, என்னென்ன முயற்சிகளில், பெரியாரின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு, என்னென்னவோ அட்டூழியங்களை, யார் யாரோ செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும் இதுபற்றி நாம் கவலைப்படாதிருப்பதற்குக் காரணம், அவர்கள், நம்முடைய புருவத்திலிருக்கிற சிறு உரோமத்தைக்கூட அசைக்கமுடியாது என்பதினல்தான்! என்னென்ன பழி தூற்றி எழுதுகிறார்கள்; எவ்வளவு கேவலமான 'சாக்கடை மொழிகளை'ப் பத்திரிக்கையில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்; அவைகளை நாம் அசட்டை செய்கிறோம்; அலட்சியப்படுத்துகிறோம். பல, நம்முடைய கவனத்திற்கு வருவதே கிடையாது. ஏன் நான் இதைப்பற்றி வேகமாகச் சொல்லுகிறேன் என்றல், இந்த மாநாட்டில் கூட மிகக் கேவலமான முறையில், ஒரு நோட்டீசை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள், பல நண்பர்கள்! என்ன இருக்கிறது அவர்களுடைய உள்ளத்திலே என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

"மாநாட்டில் வீற்றிருக்கிறார், அண்ணா அவர்கள். அவருடைய அன்புப் பாசத்தால் கட்டுப்பட்ட இலட்சக் கணக்கான மக்கள் அவருடைய உரையைக் கேட்பதற்கும், அவர் தந்த செய்தியினை பிறர் வாயிலாகக் கேட்பதற்கும் கூடியிருக்கிறார்கள். ஒரு நோட்டீசைக் காட்டி, இவர்களை இழுத்துக்கொண்டு எங்கோ ஒரு மாளிகைக்கு ஓடிவிடலாம் என்று நினைக்கிறார்களா?

"அவர்களுக்குச் சொல்லுகிறேன்—நீங்கள் கருதுவது உண்மையானலும் தோழர்களே, இவ்வளவு பேரை அடைத்துக் கொள்ளக்கூடிய மாளிகை உங்களிடத்தில் இல்லை. இவ்வளவு பேருக்கு இடம் அமைப்பதற்கு உங்களுக்கு, ஆற்றல் இல்லை என்பதை நான் எடுத்துரைப்பேன்.

"இப்பொழுது கூட நான் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, நம்முடைய கட்சிக்குப் புதிதாகக் கிடைத்திருக்கிற ஒரு பெரியவர்—கல்வித் துறையிலேயும், மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதிலேயும் வல்லமை பெற்று, தன்னுடைய அனுபவத்தை தி. மு. கழகத்திற்குப் பயன்படுத்த வந்திருக்கிற தோழர் இராமசாமி அவர்கள் என்னிடத்தில் கேட்டார்கள்—என்ன கேட்டார்கள்? 'ஏன் மிஸ்டர் சம்பத், இரண்டு பேரும் ஒன்றுவதற்கு...? என்றார். 'அதற்குச் சாத்தியமில்லை' என்று, கூறினேன்; 'ஏன்?' என்று அவர் புருவத்தை உயர்த்திக் கேட்டார்; நான் சுருக்கமாக ஒன்றைச் சொன்னேன்—நாங்கள் அவர்களை விட்டு விட்டு நீண்டதூரம் வந்துவிட்டோம்; இனி திரும்பி அவர்களிடத்தில் போவது என்பது, முடியாத காரியம்; வீராப்பு அல்ல—நாங்கள் அடையவேண்டிய இலட்சியம் இருப்பது இன்னும் கொஞ்ச தூரம்தான்; இவர்களைப் போய் மறுபடியும் சந்திப்பதற்குப் போக வேண்டிய தூரம், அதைப்போல் இரட்டிப்பான தூரம்'—என்று!

"அவர்கள் செய்துவிட்ட ஒரே ஒரு தவறுல் தாம் பிரிந்தோம்! அவர்கள் நம்மை 'துரோகிகள்' என்று வைகிறார்கள்—வையட்டும்! நாக்கில் ஈரம் இருக்கிறவரையில், தொண்டை நரம்பு துடிதுடிக்கின்றவரையில் சொல்லட்டும்! நம்மை, அது ஏதும் செய்யாது! சொல்லிக்கொண்டே அவர்கள், நம்மோடு இணை போட்டுக்கொண்டு வந்திருந்தால், எங்காவது ஒரு இடத்தில், ஒரு நிமிடத்தில் தோள்மேல் தோள் கைபோட்டுக் கொள்ளலாம்; ஆனல், அவர்கள் என்ன செய்தார்கள்? நாம் நகர்ந்த உடனே, வந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டார்கள்; உட்கார்ந்துகொண்டு மந்திரம் ஜெபிக்கிறார்கள்; யாகம் செய்கிறார்கள்—'ஒழிக, ஒழிக, ஒழிக'—என்றும் 'துரோகிகள், துரோகிகள்'—என்றும் மந்திரம் ஜெபிக்கிறார்கள். இதுதான் அவர்கள் செய்த தவறு!

"பல தோழர்களுடைய உள்ளத்தில் இருக்கிற குழந்தைத் தனமான ஆசை—'ஒன்று சேராதா? ஒத்துப்போகக் கூடாதா?'—என்பது!

"போவதற்கு எண்ணம்தான், தோழரே! அவரிடத்தில் போவதினல் எங்களுக்கு கௌரவக் குறைவு எதுவும இல்லை; காரியம் கெட்டுவிடும்! எவ்வளவோ சிரமப்பட்டு, அவர் காட்டிய இலட்சியம் எங்களுடைய கண்ணுக்குத் தெரிந்தும், அதுதான் இந்த நாட்டு மக்களை உய்விக்கிற உன்னத இலட்சியம் என்பதை உணர்ந்தும் நாங்கள் அணிவகுத்துப் புறப்பட்டுவிட்டோம். அந்த இலட்சியம் கைகூடுவதற்கு இன்னும் சிறிது தொலைவு நடந்தால் போதும்! விட்டவர்களை அழைத்துக்கொண்டு வருவதற்கு மறுபடியும் எட்டு வருடம் எங்களை நடக்கச் சொல்கிறீர்களா?

"நம்முடைய செழுதகை நண்பர்—நமது கழகத்தின் பெரியார்களின் வரிசையிலே இருப்பவர்—குடந்தை நீலமேகம் அவர்கள், உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார்கள்—'தந்தையே! 'ஊம்' என்று சொல்லுங்கள்—இதே 'ரேஸ்கோர்சில்' ஸ்பெஷல் மாநாடு போட்டு உம்மைத் தலைவராக்குகிறோம்'—என்று! தலைவர் ஸ்தானம் என்ன, அவ்வளவு பெரியது என்று கருதுகிறீர்கள்? இல்லை!

"இன்றைக்குச் சேர்ந்தால், 1964 வரையில் அவர்களுக்கும்—நமக்கும் நாட்டில் என்ன வேலை இருக்கும் என்று கருதுகின்றீர்கள? நாம் போகின்ற கூட்டத்தில் சொல்லவேண்டும் — 'பெரியாரை விட்டு ஏன் பிரிந்தோம்? ஏன் மறுபடியும் சேர்ந்தோம்—?' என்று 8 வருடங்கள் நாமும், 'இவர்களைத் 'துரோகிகள்' என்று 8 வருடம் நான் சொல்லிக் கொண்டிருந்ததேன்? இப்போது ஏன் சேர்த்துக் கொண்டேன்?—' என்று அவர் 8 வருடமும் விளக்கிக் கொண்டிருப்பதில்தான் காலம் கழியுமே தவிர, இன்றைக்கு இருக்கின்ற வழி என்ன?

"'ஒன்று கூட்டுகின்றயோசனை' 1950 வரையில் இருந்தது; 1951-வரையிலும்கூட இடமிருந்தது, அண்ணாவின் விரிந்த மனப்பான்மையினல்! 1953 வரைக் கூட இடமிருந்தது. இனி எவ்வளவு பெரிய பிரபல 'டாக்டர்'கள் வந்தாலும், நிலைமை கவலைக்கிடமாகிவிட்டது; வருகின்ற டாக்டர்களைக் கேட்கக்கூடியதெல்லாம், 'இது இன்னும் எத்தனை மாதம் இருக்கும், சார்? இது இன்னும் எத்தனை வாரம் இருக்கும், சார்? எனக்கு ஒரு வெளியூர்ப் பயணம் இருக்கின்றது; தாங்கள் சொல்லிவிட்டால், அதற்கு ஏற்றமாதிரி என்னுடைய நிகழ்ச்சிகளை வகுத்துக் கொள்ளுவேன்,'—என்றுதான் மிகப் பெரிய டாக்டர்களை நாம் கேட்க முடியுமே தவிர, 'இதற்கு ஒரு மருந்து உண்டா?' என்று கேட்க இட

(4-ம் பக்கம் பார்க்க)

ரூர்கேலாவில் மற்றும் ஓர் தொழிற்சாலை

ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் உருக்குத் தயாரிக்கும்

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று, ரூர்கேலாவிலுள்ள இந்துஸ்தான் உருக்குத் தொழிற்சாலையில், 7,80,00,000 'மார்க்' (65,00,000 ஸ்டர்லிங்) மதிப்புள்ள ஒரு நிலக்கரி அடுப்புத் தொழிற்சாலையை நிர்மாணிக்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தொழிற்சாலை, ஒரிசா மாநிலத்தின் மேற்குப் பகுதியில், கல்கத்தாவிற்குச் சுமார் 255 கல் தொலைவுக்கு அப்பாலுள்ள ஒரு இடத்தில் நிர்மாணிக்கப்பெறும் என்றும், அந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு பத்து இலட்சம் டன் உருக்குத் தயாரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!

'ஓரவஞ்சனை' செய்வதாகத் தென்னாடு எண்ணக்கூடாது!

சென்னை, ஜுன் 10—

"டில்லி ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் வடநாட்டினருக்குச் சலுகை காட்டுவதாக தென்னாட்டினர் கருத வேண்டாம்; வடநாட்டிலுள்ளவர்கள் தங்களை நியாயமாக நடத்தவில்லை—தங்கள் நலனைப் புறக்கணிக்கிறார்கள் — ஓரவஞ்சனை செய்கிறார்கள் என்று தென்னாட்டினர் நினைக்கவும் வேண்டாம்"

என்று, மக்கள் சபைத் தலைவர் எம். அனந்தசயனம் (அய்யங்கார்) கூறியுள்ளார்.

குறைகூறப்பட்டாலும் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ள முடிந்ததாம்!

200 ஆண்டுகளாக இருந்துவரும் இன்றையக் கல்வி முறைபற்றி சென்னை கவர்னர்

உதகை, சூன் 7—

"200 ஆண்டுகளாக இருந்துவரும் கல்வி முறையை பலர் குறை கூறினர் என்ருலும், தேசிய வாழ்க்கையில் அது முக்கியத்துவம் வாய்க்கப்பெற்றது; அதற்கு திட்டமான குறிக்கோள் இருக்கிறது; எப்படித்தான் குறைகூறப்பட்டாலும் இந்தக் கல்வி முறை மூலம்தான் இந்தியா வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ள முடிந்தது; மக்கள் அதிக அறிவைப் பெற்றதையும் மறுக்க முடியாது,"

என்று, சென்னை மாநில கவர்னர் பிரகாசா, போதனு முறை கல்லூரிகளில் ஆராய்ச்சிக்கு வகை செய்யக் கோரும் விவாத அரங்கை துவக்கி வைக்கையில் கூறியுள்ளார்.

கர்ப்பத் தடைக்கு புதிய முறை!

மாநில சர்க்கார் 'பரிசோதனை' நடத்தும்

சென்னை, சூன் 8—

புதியதாகக் கண்டுபிடித்துள்ள 'நுரை மாத்திரை'யின் கருத்தடை—கட்டுப்பாடு முறை குறித்து நேரடிச் சோதனைகள் நடத்திப்பார்க்க சென்னை அரசியலார் விரைவில் ஒரு திட்டத்தை அமுல் செய்வர்.

கர்ப்பத்தடைக்கும், ஒரு குழந்தைக்கும்—மற்றொரு குழந்தைக்கும் அதிக வயது வேறுபாடு இருக்கச் செய்வதற்கும் 'நுரை மாத்திரை' முறை மிகவும் மலிவானது; தீங்கற்றது; வெற்றிகரமானதும்கூட என்று சொல்லப்படுகிறது. ஆராய்ச்சிக்கூடச் சோதனைகளில் அதன் பலன் கண்டறியப் பட்டதாம்.

இம்மாத்திரைகள் பெண்களுக்கு மட்டும்தானும்! அயல் நாட்டில் தயாரிக்கப்பட்ட இவ்வித மாத்திரைகள் ஏற்கனவே கடைகளில் விற்கப்படுகின்றனவாம்!

அவ்வித மாத்திரைகள் தற்போது இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன; அவற்றை மக்களிடையே வழங்கிச் சோதிக்கப்படும் இந்த மாத்திரைகள் விலை ஒன்று அல்லது இரண்டு தம்பிடிகள் தான் ஆகுமாம்!

இதுவரைபரப்பப்பட்டுள்ள கருத்தடை முறைகள் எதுவும் மத்திய தர மக்களேயும், ஏழைமக்களேயும் கவரவில்லையாம்! நடுத்தர மக்கள் எந்த முறை குறித்தும் ஊக்கம் காட்டவில்லையாம்! 'ஏழைகளுக்கோ, அம்முறைகளுக்காகும் செலவு, அவர்களது சக்திக்கு மேற்பட்டதாக இருக்கிறது' என்று சர்க்கார்கூறுகிறது

மனித அறிவும் இயற்கையும்!

மலை ஏறுவது பற்றி விளக்கம்

கல்கத்தா, சூன் 8—

"மலையேறுவதைப் பொறுத்த வரையில் 'வெற்றி', 'தாக்குதல்' என்ற இரு வார்த்தைகளும் பயன்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை"

என்று, மனுசுலு சிகரத்தை எட்டிப் பிடித்த குழுவினரின் தலைவரான மாகி என்பார் கூறியிருக்கிருர்.

"மலையேறுவதானது ஒருபெரிய போட்டி விளையாட்டைப் போன்றதாகும். பெரிய சிகரங்கள்மேல் ஏறுவதானது, ஏழத் தாழ, இயற்கையை நோக்கி மேற்கொள்ளுகின்ற ஒரு புனித யாத்திரையைப் போன்றதாகும் என்று கருதுகிறேன். மனிதனுடைய அறிவும், இயற்கையும் ஒரே நியதியின் பிரிவுகளாகும். நாம் மலையேறப் போகும்போது எதனுடனும் போரிடப் போவதில்லை" என்றும் அவர் கூறியிருக்கிருர்.

காலங்கடந்து உதவுகின்றனர்!

திருப்பூர் குமரனின் அன்னைக்கு, சின்னுட்களுக்கு முன், ஐம்பதினுயிரம் ரூபாய் பெறக் கூடிய, 10 ஏக்கர் பண்ணை நிலம், தியாகி மானியமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. கொடி காத்த குமரனின் அன்னை வறுமையால் துன்புறுகிருர் என்பதை அறிந்தே இந்த நிலம் அளிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

பிரச்சினைக்கு இறுதி வாய்ப்பாக இருக்க வேண்டுமென்கிருர் கிரி!

பெங்களூர், சூன் 8—

ஒரு குறிப்பிட்ட தொழிலைப் பொறுத்த வரையில் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அனைவருடைய நலனேயும் உத்தேசித்து, அத்தொழிலாளர்களிடையே வட்டார ஒருமைப்பாடுகள்—வட்டார இணைப்பு அமைப்புக்கள் ஏற்பட வேண்டும் என்றும், அப்படிப்பட்ட இணைப்பு அமைப்புக்களினுல் மட்டும்தான் தொழிலாளர்கள் நலன்பெறவும், தங்களேத் தாங்களே பலப்படுத்திக் கொண்டு தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும் என்றும், முன்னுள் மத்திய தொழில் அமைச்சர் வி. வி. கிரி அவர்கள், சென்னை வட்டார 'டெலிகிராப்' ஊழியர்கள் கூட்டு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"அதிகாரிகளுக்கும் — தொழிலாளர்களுக்குமிடையே 'கூட்டு மனப்பான்மை' வளர வேண்டும்; அந்த இரு சாராரும் ஒரே இடத்தில் கூடி, இலாகாவாரியான பிரச்சினைகளை எடுத்து விவாதிக்க வேண்டும். ஒரு இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள், அவ்விலாகாவில் வேலை செய்யும் பிறகு தொழிலாளர்களுடன் தம்மையும் ஒருவராகக் கருதிக்கொண்டு, தொழிலைப் பொறுத்தவரையில் தாங்களும் பங்குதாரர்கள் என்ற மனப்பான்மை தங்களிடையே வளர்த்துக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

மேலும் அவர், தொழிலாளர்கள் அடிக்கடி வேலைநிறுத்தங்கள் மேற்கொள்ளுவது கூடாது—தவறுனது என்றுகூறி, அவ்வாறு வேலை நிறுத்தம் செய்தால் யாருக்கும் எந்தவித நன்மையும் கிடையாது என்றும், வேலை நிறுத்தம் செய்வதானது, தொழிலாளர்கள் பெற்றிருக்கின்ற நியாயமான உரிமையே என்ருலும்கூட, அந்த முறை, பிரச்சினைக்குத் தேவைப்படும் இறுதிப் பரிகாரமாக அமைதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

பழமை வெறிக்கு பாவை பலி!

பாட்னு, சூன் 8—

தனது கணவனின் சடலம் எரிந்துகொண்டிருந்த சிதையில விழுந்து உயிர் துறந்தாளாம் சரளா தேவி என்ற பெண். இந்நிகழ்ச்சி மான்பூம் மாவட்டத்திலுள்ள பார்சா கிராமத்தில் நடந்திருக்கிறது.

அககிராம மக்கள் இருமுறை இந்தப் பெண்ணைத் தடுத்ததாகவும், மூன்ரும் முறை அவள் எல்லோரிடமிருந்தும் தப்பி உடன்கட்டை ஏறியதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

தமிழுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்க்க!

இலங்கைத் தமிழரைத் திரட்டுவதில் புதிய முறை

அச்சுவேலி, சூன் 9—

இலங்கையில் தமிழ் மொழிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை நீக்கும் வகையில் பொதுமக்கள் தீவிரமாக ஈடுபட்டுழைக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளும் 'சங்கிலித் தொடர் அஞ்சல் அட்டை இயக்கம்' ஒன்று யாழ்பாணத்தில் ஆரம்பமாகியிருக்கிறது

தமிழ் மொழின் மாண்பை விளக்கும் சொற்கள் கொண்ட அட்டைகள் தினமும் பெருந்தொகையானவர்களுக்கு அஞ்சல் மூலம் கிடைத்து வருகின்றன. அதனைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் அதில் குறிப்பிட்டுள்ள சொற்களேத் தம் கைப்பட எழுதி, இதர ஏழு நண்பர்களுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று அவ்வஞ்சல் அட்டையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த வேண்டுகோள் பெரும்பாலும் ஒவ்வொருவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது காரணமாக, மேற்குறித்தப் பிரச்சார இயக்கம் விரைவாக வலுவடைந்துள்ளது.

தமிழ் மொழியின் பெருமையை விளக்கும் பாடல்களும், உணர்ச்சி மிக்கச் சொற்களும் அதில் பொறிக்கப்பட்டுள்ளன.

12,50,000 சைக்கிள் தேவைப்படுமாம்!

புதுடில்லி சூன் 10—

இந்தியாவுக்கு 1960—61-ம் ஆண்டில் 12,50,000 'சைக்கிள்'கள் தேவையாயிருக்குமென்று தேசிய முன்னேற்றக் கவுன்சில் மதிப்பிட்டிருக்கிறது.

பெரிய 'சைக்கிள்' தொழிலகங்களில் 10 இலட்சம் வண்டிகளும், சிறிய தொழிற்சாலைகளில் $2\frac{1}{2}$ இலட்சம் வண்டிகளும் தயாரிக்கப் படவேண்டுமென்று கவுன்சில் சிபாரிசு செய்துள்ளதாம்.

சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான இயந்திரம்

இந்தியாவிலேயே தயாரிப்பு?

சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை நம் நாட்டிலேயே தயாரிப்பதற்கு 4 திட்டங்களை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. 1961-க்குள் அவை முழுசக்தியுடன் வேலை செய்யும்போது ஒரு ஆண்டுக்கு 8 சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்களைத் தயாரிக்குமாம். ஏற்கனவே சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய சில இயந்திரங்கள் இந்தியாவில் தயாராகி வருகின்றன.

கலப்பு மணம் பற்றி காங்கிரஸ் தலைவர்

"நான்கு சுவர்களுக்கு நடுவில் கோதி அரண்மனையில் இருக்கும் நிசாமே கலப்பு மணத்தை ஆதரித்தால், உலகில் நெடுந்தூரம் சுற்றுப்பயணம் செய்யும் நாம், நம் பழைய எண்ணங்களை மாற்றிக் கொள்ளவேண்டாமா?" என்று காங்கிரஸ் தலைவர் தேபர் ஒரு கூட்டத்தில் வினுவெழுப்பினுராம்!

தாராளமாக இருக்கட்டும்!

கர்நூல், சூன் 8—

"தேர்தலின்போது இப்போதுள்ள அரசியலார்தான் பதவியில் இருப்பார்கள்"

என்று இந்தியப் பேரரசின் உதவி உள்நாட்டிலாகா அமைச்சர் திரு. பி. என். தத்தார் இங்கு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், குறித்தத் தேதிகளில் பொதுத் தேர்தல்களை நடத்தி விடவேண்டுமென்றே அரசியலார் முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும், மாநில சீரமைப்பில் தொல்லை எதுவும் ஏற்படுமென்று தான் நினைக்கவில்லையென்றும் கூறினுர்.

20,000 அடி உயரத்திற்குமேல் 4 மைல் நீளமுள்ள சமவெளி!

எவரெஸ்ட் சிகரத்தை ஒட்டியுள்ளதாம்!

எவ்வித இடைஞ்சலுமின்றி விமானங்கள் இறங்கித் திரும்பிச் செல்ல முடியுமாம்!

காட்மண்டு, சூன் 10—

இமயமலையில், எவரெஸ்ட் சிகரத்தையொட்டி சுமார் 20,000 அடி உயரத்திற்குமேல், 4 மைல் நீளமுள்ள ஒரு சமவெளி இருக்கிறது.

இதனை சுவிஸ் நாட்டு மலையேறும் கோஷ்டியைச் சேர்ந்த பீட்டர் ஜான் வெப்ஸ்டர் என்ற பிரிட்டிஷ் உறுப்பினர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிருர்.

இவ்விவரத்தைத் தந்த ஜான் வெப்ஸ்டர் 'காம்காலு' எனும்இடத்திலிருந்து 'சோலெக்கும்பு' எனும் இடம்வரை செல்லுகையில், ஏறத்தாழ 1,000 அடி உயரத்தைச் செங்குத்தாகவே ஏற வேண்டியிருந்தது என்றும், மலையுச்சியை அடைந்ததும், மிகுந்த ஆச்சரியம் அளிக்கும் வகையில் தட்டையான சமவெளிப்பகுதி இருக்கக் கண்டதாகவும், அது சுமார் 4 மைல் நீளத்திற்குப் பரந்துகிடப்பதாகவும் குறிப்பிட்டுவிட்டு, உலகில் உள்ள சமவெளிப் பகுதிகளையெல்லாம் விட அது மிக உயரத்தில் உள்ள ஒரு சமவெளியாகும் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்திருக்கிருர்.

அந்தச் சமவெளியின் வடக்குப் பகுதியைத் தவிர, மற்ற 3 பகுதிகளிலும் 1,000 அடிக்குக் குறையாமல் பள்ளத்தாக்குகள் இருக்கின்றன என்றும், அந்தச் சமவெளியில் ஆகாய விமானங்கள்கூட தாராளமாக எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் வந்து தங்கி, திரும்பிச் செல்ல முடியும் என்று தாம் கருதுவதாகவும் கூறியிருக்கிருர்.

மேலும், அந்தச் சமவெளியில், ஒவ்வொன்றும் ஒவ்வொருமைல் நீளமுள்ள 5 பெரிய ஏரிகள் இருக்கின்றனவாம். அவை தவிர, சுமார் 100 பேர் மட்டுமே கொண்ட 6 சிறிய திபெத்தியக் கிராமங்களையும் கண்டனராம். அந்தக் கிராம மக்கள் இப்போதுதான் முதன் முறையாக ஒரு ஐரோப்பியனைப் பார்த்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

திருமணங்கள்

4-6-56 காலை 9 மணியளவில், திருச்சி தி. மு கழக உறுப்பினரும், தீவிரப் பொதுப்பணியாளருமான தோழர் ரா. பொன்னுரங்கம்—தோழியர் இராசலட்சுமி திருமணம், திருச்சி கருணுநிதி பார்க்கில், அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மணவிழாவினை நடத்திவைத்த அண்ணு அவர்கள் மணமக்களைப் பாராட்டியும், சமுதாயச் சீர்திருத்தப் பணியின் அவசியத்தையும் விவரித்துப்பேசினுர்.

பிறகு மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் அ. பொன்னம்பலனுர், பொன்மலை பராங்குசம், போளுர் சுப்பிரமணியம். என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

மணமக்களுக்கு வாழ்த்துரைகளும், அன்பளிப்புகளும் வழங்கப் பட்டன.

தலைவர் முடிவுரைக்குப்பின் மணமகன் பொனுரங்கம் நன்றி கூறியதுடன் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தந்தார்—வரப்பெற்ருேம் — நன்றி—பொறுப்பாளர்.

* * *

9—5—56 இரவு 8 மணியளவில், பம்பாய்—தாராவி வாழைக் கட்டவாடியில், நெல்லை மாவட்டம் தோழர் எஸ். சங்கரபாண்டியன்—தோழியர் வேலம்மாள் திருமணம் தோழர் ச. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். தியாகராாசன். சி. த. மு. இா. ஆரியசங்காரன் வாழ்த்துரை வழங்கினர். நண்பர்களிடமிருந்தும் உறவினர்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துக்களும், பரிசுகளும் கிடைக்கப்பெற்றன. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 5 மணமக்களால் அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

27—5—56 காலை 9 மணியளவில், சென்னை-வேப்பேரி, ரண்டால்ஸ் ரோடு, எண் 9 இல்லத்தில் தோழர் க. அன்பழகன் தலைமையில் தோழர் செயராமன்—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் அறிவுடைநம்பி துரைராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தலைவர் அவர்களால் செயராமன்—சரோசா என்ற பெயர்கள் வெற்றியழகன்—தாமரைச் செல்வி ஆக மாற்றப்பட்டன. மணமக்கள் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாக தரப்பட்டுள்ளது. வரப்பெற்ருேம்—நன்றி-பொறுப்பாளர்.

* * *

3—5—56ல், வளவனூரில் தோழர் சுப்பிரமணியன்—தோழியர் முத்துஇலக்குமி திருத்திய திருமணம் ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் கே. எம் முத்துகுமாரசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் எ கோவிந்தசாமி எம் எல் ஏ., மற்றும் தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

3—6—56-ல், நெல்லை மாவட்ட நாகலாபுரத்தில் தோழர் ஞானசேகர பாண்டியன் — தோழியர் சரசுவதி திருமணம் தோழர் க. ஜெயபால் தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. பொன்னம்பலனுர் வாழ்த்துரை வழங்கினுர். தம்பதிகளுக்கு வாழ்த்துக்களும், பரிசுகளும வந்திருந்தன. இதன் நினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 தோழர் ஆ. க. முத்துசாமி மூலம் வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

30—5—56ல், திருச்சி மாவட்ட வெங்கடேசபுரத்தில் தோழர் குழந்தை—தோழியர் பழநியம்மாள் திருத்திய திருமணம், தோழர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. மாணவி வள்ளியம்மை இன்னிசை வழங்கினுர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

31-5-56—ல் தேனி தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் மா. துரைசாமி—தோழியர் சரோசா திருமணம் திருமலாபுரத்தில், மணமகன் இல்லத்தில், தோழர் ஆ. செண்டு தலைமையில் நடைபெறது. தோழர் கு. சேரலாதன் வாழ்த்துரை வழங்கினுர். மணமக்கள், ஏராளமான வாழ்த்துக்களும், பரிசுகளும் கிடைக்கப் பெற்றனர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்தனர்—வரப்பெற்ருேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

31—5—56 காலை 11 மணியளவில் நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தில் தோழர் க. செல்வன்—தோழியர் சீதா திருமணம் தோழர் ச. வீரபாகு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், த. வை. இலக்குமணன் தோழியர், சன்முகம்—நடராசன் வாழ்த்துரை வழங்கினர்.

சென்னை அரசாங்கத்தின் முதலைக் கண்ணீர்!

என். ஜி. ஓ. சங்கத்தின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன

சென்னை, ஜூன் 11—

– சென்னை அரசாங்கத்தில் அலுவல் புரிந்து வருகின்ற கெஜட் பதிவாகாத உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் வேண்டுகோள்களைச் சென்னை அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

இச்சங்கத்தின் சார்பில் 1955-ம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கண்டுள்ள வேண்டுகோள்களில், கெஜட் பதிவாகாத உத்தியோகஸ்தர்களின் பெற்றோர்களுக்கு 'இடம் மாற்றப் பிரயாணப் படி' தருவது சம்பந்தமான வேண்டுகோள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது சம்பந்தமான உத்திரவு 1956-ம் ஆண்டு மே மாதம் 27-ம் நாள் போடப்பட்டுள்ளதாம்.

இத்தகவலை நிதி இலாகா காரியதரிசி, கெஜட் பதிவாகாத உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளரிடம் அறிவித்தார். அப்போது அவர், ஏனைய வேண்டுகோள்களை நிறைவேற்ற இயலாமைக்கு அரசாங்கம் வருந்துவதாகக் குறிப்பிட்டாராம்!

வட்டார மொழியில் டைப் அடிக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்கட்குச் சம்பளத்தில் பிரத்தியேக உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையானது, வட்டாரமொழியிலேயே அரசாங்க அலுவல்களை நடத்தும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் பரிசீலனை செய்யப்படுமாம்.

★

சென்னை, ஜூன் 11—

சென்னை வட்டாரத்தைச் சேர்ந்த கடைசிதர அரசாங்க ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு தூதுக் குழு, இன்று சென்னையின் முதலமைச்சர் காமராசர், நிதி மந்திரி சுப்பிரமணியம், பிரதம காரியதரிசி சத்தியநாதன் ஆகியோர்களைச் சந்தித்து மே 13ம் நாள் நடைபெற்ற சங்கத்தின் ஆண்டு விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பிரதிகளை அவர்களிடம் கொடுத்தது.

அத்தீர்மானங்களில் சம்பள உயர்வு. மற்ற வசதிகள் முதலியவை குறிக்கப்பட்டிருந்தன. கடைசி தர அரசாங்க ஊழியர்களின் குறைகளை கூடியவிரைவில் போக்க அரசாங்கம் ஆவன செய்யும் என்று தூதுக் குழுவினர் அறிவிக்கப்பட்டனராம்.

காங்கிரஸ் கட்சியின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட ஒரு கட்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ள சின்னத்தின் சார்பில் தேர்தலில் ஒருவர் கலந்து கொண்டால் அல்லது, அவரை அக்கட்சியைச் சேர்ந்தவராகக் கொள்ளமுடியாது. அதுவுமின்றி, குறிப்பிட்ட கட்சியின் சார்பில் நிறுத்தப்படும் ஒருவரை அக்கட்சி உறுதி செய்வதுடன், அந்த உறுதிப்பாட்டை முன்கூட்டியே தொடர்புடைய தேர்தல் துறை அதிகாரிக்கும் அறிவித்தாக வேண்டும். அதேபோன்று, குறிப்பிட்ட அபேட்சகரும் அதை உறுதிப்படுத்த வேண்டும். அந்த உறுதிப்பாட்டு அறிவிப்பும், அபேட்சை மனுவை வாபஸ்பெற, தேர்தல் துறையால் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நாளுக்குள்ளாகச் செய்தாகவேண்டும்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

'நம் நாடு' இதழின் நான்காம் ஆண்டுத் துவக்கத்தில் வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு, முன்பணம் அனுப்பிய தோழர்களுக்கு மட்டுமே முதற் சலுகை அளிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—பொறுப்பாளர்

இராமநாதபுரம் மாவட்டத்தில்

அண்ணா

சுற்றுப் பயணம்

★

ஜூன் 14 : மாலை—இராமநாதபுரம்
இரவு—பரமக்குடி
„ 15 : மாலை—திருவில்லிப்புத்தூர்
இரவு—தளவாய்புரம்
„ 16 : மாலை—சாத்தூர்
இரவு—விருதுநகர்
„ 17 : —அருப்புக்கோட்டை

அண்ணா அவர்களுடன் தோழர்கள் கண்ணதாசன், எம். எஸ். இராமசாமி, முகவை. ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வேண்டுகோள்

"எனது மகன் இளங்கோவுக்கு கண்ணில் 'ஆப்ரேஷன்' செய்ய மதுரை மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதால், பத்து நாட்கள்வரை மதுரையில் தங்கவேண்டியதாய் உள்ளது. எனவே, கடிதம் எழுதும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்."

முகவரி: பி. சமதர்மம்,
தி. மு. கழகம்,
4, கட்ரூபாளையம்,
மதுரை.

சொற்பயிற்சிக் கூட்டம்

13-6-56 மாலை 6-30 மணிக்கு சென்னை-திராயபுரம், ஆண்டியப்ப கிராமணி தெருவிலுள்ள திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தில, 'புத்தர் நெறி' என்பது பற்றித் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் தோழர்கள் வண்ணை க. சிவா, மு. த. இளஞ்சேரன், நாகராசன், தி. நா. மதவாணன் ஆகியோர் பேசுவர்.

ஆறுதல் நாள்

"13—6—56 காலை 10 மணியளவில் காஞ்சி காந்திரோடு 199 எண்ணுள்ள இல்லத்தில், கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர் தோழர் என். கே. பக்தவத்சலம் இயற்கையெய்தியதை முன்னிட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில், தோழர் கே. எஸ். பார்த்தசாரதி தலைமையில், ஆறுதல் நாள் நடைபெறும்.

வருந்துகிறோம்

நமது இயக்கத்தின் முன்னணி வீரரும், நமது 'நம் நாடு' இதழின் ஆரம்ப காலத்தில் பொறுப்பாளராக இருந்து பெரும்பணி புரிந்தவருமான தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களின் அருமைத் தந்தையார் திரு. அப்புலிங்கம் அவர்கள், பூவானூரில், 11—6—56 காலை 4-30 மணி அளவில் இயற்கையெய்தியதை வருத்தத்துடன் அறிவித்துக்கொள்ளுகிறோம். தந்தையை இழந்து வருந்தும் நண்பருக்கும், குடும்பத்தார் அனைவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ஆ-ர்.)

ஈ. வெ. கி. சம்பத் இலட்சிய முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேட்க இடமில்லை. இது குணமாக வழியுண்டா?—காலம் கடந்துவிட்டது; வெகு பேர்களைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டது, தமிழ் நாடு! வெகு பேர், 'செய்கிறேன், செய்கிறேன்' என்று கூறுவர்; 'நீங்கள் செய்ததுதான் சரி; எங்களை அவர் அவமானப் படுத்திவிட்டார்'—இது பல தூது கோஷ்டிகளின் ஒரே பதில்! யாரையும் குறை சொல்லுவதற்காக இதை, இங்கே நான் சொல்லவில்லை; நிலைமையை உணர்ந்து, நம்முடைய நினைப்புகளை மாற்றிக் கொள்ளவேண்டும்.

"இன்றைக்குச் செய்யக்கூடியதெல்லாம் என்ன? நாம் பெரியாரை வைவதில்லை; வைவதற்குரிய எவ்வளவோ வாய்ப்புகளை அவர் தூக்கித் தூக்கி எறிந்தார்—நாம் அந்தத் திக்கை நோக்கியும் பார்ப்பதில்லை. வெகுவாக வைகிறார்; அண்ணாவைக் 'கண்ணபின்னா' வென்று வைகிறார்; கூட இருக்கின்றவர்களை மிகக் கேவலமாக வைகிறார்!

"இங்கே இருக்கிற கண்டிப்பான உத்தரவு மட்டுமல்ல—தி. மு. கழகம் தோன்றிய நாளிலிருந்து இந்த நிமிடம் வரை இருக்கின்ற அண்ணாவின் நிரந்தர உத்தரவு மட்டுமல்ல, காரணம்; யாருக்குமே தோன்றுவதில்லை, 'திருப்பி வையவேண்டும்'—என்று! நிலைமை சில வேளைகளில் மிகவும் முற்றிவிட்டால் விளக்கம் தருகிறோம்.

"இப்போது திடீரென்று ஒருவர் பத்திரிகையில் போட்டார்—'கண்ணீர்த்துளிக் கும்பலிலேயிருந்து சம்பத் விலகினான்! அண்ணாதுரை 'அவன்—இவன்' என்று எழுதுகிற காரணத்தால் கோபித்துக்கொண்டு விலகினான்,'—என்று!

"சம்பத், கிழவனல்ல—ஆனால், பாப்பாவும் அல்ல—என்பதை, நம்முடைய தோழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

"உள்ளபடியே, தனிப்பட்ட சொந்த உணர்ச்சியை நான் சொல்லுகின்றேன் என்றாலும், தோழர்கள் அதற்காக மன்னித்துக் கொள்ள வேண்டும்.

"16, 17 வருடங்களாக, எனக்கு வாழ்க்கையிலிருக்கிற ஒரே ஒரு அண்ணனாக நான் கருதிக் கொண்டிருப்பவர் அண்ணாவாகும்; அவரை நான் அண்ணனாக ஏற்றுக்கொண்டபோது, கழகம் எனக்குத் தெரியாது; பேச எனக்கு வராது; பத்திரிகை படித்ததில்லை; சின்னப் பையன்; அரை நிஜார் போட்டுக்கொண்டு, அவர் தின்றது போக மிச்சமிருக்கிற, 'பட்டணம் பகோடா'த் தூள்களைக் கையில் ஏந்திக் கொண்டு, 'அதுவே நமக்குக் கிடைக்கும் வரப்பிரசாதம்' என்று எண்ணிக் கொண்டிருந்த காலம்; 'வாடா சம்பத், சினிமாவிற்குப் போகலாம்' என்று, பெரியார் தலை மறைந்ததும், அண்ணா அழைத்துக் கொண்டு போவார்; அதிலே எல்லாம் இன்பம்கண்டேன்; எவ்வளவு பெரியவர்கள் எவ்வளவு பெரிய விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தாலும், 'சம்பத், உட்கார்' என்பார்; தூங்கினாலும் எழுப்பிவிட்டு, 'அதற்குள் என்ன தூக்கம்?' என்பார்; இப்படித்தான் அவரை நான் அண்ணனாகப் பெற்றது; அவருடைய பேச்சைக்கண்டு மயங்கி அல்ல; அவரது எழுத்தைக்கண்டு அல்ல; 'திராவிடத்தின் பெர்னார்ட்ஷா' என்று எவனோ அவரைப் பாராட்டிவிட்டான் என்பதில் சொக்கிப் போய் அல்ல—நான் அவரை அண்ணாவாக ஏற்றுக்கொண்டது!

"அண்ணனாகவே பெற்றேன்; நான் பெற்ற அண்ணன் இந்த நாட்டில் ஒரு பொதுவேலையில் ஈடுபட்டுவிட்டான் என்று தெரிந்த உடனே, 'தம்பியின் கடமை பின் தொடர வேண்டியது' என்று தொடர்ந்தேன்; அவரது வேகத்தில் நடக்க முடியாவிட்டாலும், என்னைக் கரும் அவரது கை, என் விரலைப் பிடித்துக் கொண்டிருக்கும் என்ற தைரியத்தில், துள்ளிக் குதித்து, அவர் பின் செல்கின்ற தம்பியாவேன்!

"அண்ணாவுக்கு வேண்டுமானால் இலட்சக்கணக்கான தம்பிகள் உண்டு; ஆனால், எனக்கு ஒரே ஒரு அண்ணன் உண்டு.

"அந்த அண்ணனை நான் இழந்துவிடுவேன் என்றோ, இழந்துவிட வேண்டும் என்றோ எவனாவது கருதினால், 'மடையனே! நீ புத்தி பெறுவதற்கு இன்னும் வெகுநாள் இல்லை' என்றுதான் கூற இயலும்.

"எவ்வளவு சின்னத்தனமாக அவர்கள் எழுதுகிறார்கள்; 'விடிந்தால் புளுகு என்பது அம்பலமாகிவிடும்' என்பது தெரிந்தாலும் ஒரு நப்பாசை — 'செல்லுகிற சாயங்காலம்வரை அமுலில் இருக்கட்டுமே; இதைப் பார்த்து, பதில் அறிக்கை, விடுவதற்கு நாளைய 'நம் நாடு' இதழ்தானே கிடைக்கும்? இந்த 48 மணி நேரத்தில், ஆங்காங்கே இருக்கிற நம்முடைய தோழர்கள் — சுவற்றில் எழுதுவதில் வல்லவர்கள் — எழுதிக்கிழித்துவிடுவார்கள்; உடனே மாநாடே கூடாமற் கலகலத்து, தட்டுத்தடுமாறிவிடும்'—என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

"தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் நான் கூறுகிறேன்—எவருடைய இழப்பினாலேயும், தி. மு. கழகம் பெற்றிருக்கிற வளர்ச்சி, அடைந்திருக்கிற பெருக்கு பாதிக்கப்படாது—என்பதை, அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்! ஒருவர் விலகுவதால் உடை நதும்பாய்விடக்கூடிய நிறுவனம் தி. மு. கழகம் அல்ல!

"தோழனே! நான் விலகிவிட்டேன் என்பதில் பெருமகிழ்வு அடைந்த புலமதியாளனே! எனக்குத் தெரியும் — உன்னுடைய இயக்கத்தில், அவருக்குப் பிறகு நீங்கள் பொடிப்பொடியாகிவிடுவீர்கள்! ஊதிவிட்ட பலூனில் ஒரு ஊசி முனை பட்டதும், 'படார்' என்று வெடிப்பதுபோல நீங்கள் வெடித்துப் போய்விடுவீர்கள்! அது, உங்களிலேயே பலருக்குத் தெரியும்! அதனால்தான், பெரியார் மலாயா போய்விட்டார் என்றால், 'பெரியாருக்குப் பிறகு?' என்று பொருள் குறித்து, மாநாடு கூட்டுகிறீர்கள்! பெரியாரை துந்த நாட்டில் விலை நிறுத்தச் செய்பவர்கள், நீங்கள் அல்ல!

"எல்லோரும் ஒன்றாயிருந்த நேரத்தில், பெரியாரால் ஒதுக்கிவைக்கப்பட்ட—அரசியலில் தாழ்த்தப்பட்டவர்களாயிருந்தவர்கள் தான், இன்று, பெரியார் மாளிகை காலியான உடனே கொம்புக்கு ஒன்றாகத் தொங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

"நெடுஞ்செழியன் அவர்களை வழிமொழியும்போது நான் குறிப்பிட்டேன்—'அண்ணா அவர்களின் மீது பெரியாருக்குக் கோபம் வந்தால், நெடுஞ்செழியன் அவர்களைத்தான் 'அறிஞர்' என்று அழைப்பார்; அவருடைய மார்பின் அளவைத்தான் எடுப்பார்—'தளபதிச் சட்டை' தைப்பதற்கு'—என்று நான் சொன்னேன். இன்றைக்குப் பெரியாரின் மாபெரும் படையிலுள்ள உங்களில் ஒருவர்கூட அன்றையத் தினம் அவரால்பாராட்டப்படாததேன்? பாராட்டப்படாதது மட்டும் அல்ல—காதொடிந்த ஊசியாகக் கடைத்தெருவிலே நடமாடிக்கொண்டிருந்த உங்களை 'சதிகாரன்' என்று அவர், அன்று சொல்லியிருக்கிறார்; 'கோகலே மன்றத்தில் சதிக்குடும்பம் இருக்கின்றது' என்று உன்னையும் உன் குடும்பத்தையும் நேரில் வைத்துக் கொண்டு சொல்லி இருக்கிறார்; இன்றைக்குத்தான் என்ன சொல்லுகிறார்? 'எனக்குப் பிறகு எவன் மேலும் எனக்கு நம்பிக்கையில்லை; ஆகவே, ஒரு பந்தோபஸ்து செய்யப்போகிறேன்; அதைச் சட்டப்படி செய்யப்போகிறேன்'—என்றுதான் சொல்லுகிறார்.

"தோழர்கள் என்னைத் தயவு செய்து மன்னிக்கவேண்டும். இந்தப் பிரச்சினைக்குத் தரப்படவேண்டியதைவிட அதிக முக்கியத்துவம் நான் தந்ததற்குக் காரணம், என் பெயர் இழுக்கப்பட்டு, தமிழ் நாட்டில் கடந்த 4, 5 மாதங்களாக ஒரு சதி உருவாகி இருப்பதை நான் உணர்ந்ததுதான்.

"உலகம் தெரிந்துகொள்ளப் பிரியப்படுகிற பருவத்தை தி. மு. கழகம் எய்திவிட்டது; தமிழ் நாட்டிலே இருக்கிற மக்களுக்கு, கழக இலட்சியத்தை அறிவித்துவிட்டோம்; அறிந்தவரில ஆண்மையாளரை நம்பக்கத்தில் பெற்றுவிட்டோம்; உலகத்திலே இருக்கிறவர்கள் மெள்ள மெள்ள நம் பக்கம் வருகின்றார்கள்.

"உலகத்தின் கண்களுக்குத் தெரியாதிருந்த நமது இலட்சியம், இன்று உலகத்தார் அனைவரையும் தான் பார்த்துக்கொள்கிற பொலிவையும், வலிவையும் பெற்றிருக்கிறது.

"இந்த நேரத்தில் சில்லரைச் சூழ்ச்சிகளினால் ஒரு பெரிய முயற்சியைக் குலைத்துவிட முடியும் என்று எவரும் கருதிவிடாதீர்கள்.

"இன்று நம்முன் உள்ள பிரச்சினைகள் வேறு.

"இன்றைய சர்க்கார், பல தோழர்களிடத்தில் பரிவு காட்டுகிறது என்றால், என்ன அதனுடைய பொருள்?

"அண்ணாவினிடத்தில் கால்தேய நடந்து, சாமியாரைப்போல் உட்கார்ந்து 'பாடம்' கேட்டு, 'இதை ஒன்றும் அசைக்க முடியாது; ஆசைவார்த்தை காட்ட முடியாது; பார்ப்பது என்றாலே ஒரு மாதம் ஆகிறது' என்று கண்ட பிறகு தூரத்திவந்து, விரோதமாக மாறி, 'இவர்களை ஒழிப்பதற்கு வழி என்ன?' என்று பார்க்கிறார்கள்!

"அப்படிப்பட்ட காமராசரைத் தொடர்ந்து, நாம் கூடவரவில்லை என்று தூற்றுகிறார்கள், சிலர்!

"'காமராசர் உலகத்திலேயே ஒரே கடவுள்; அவரைப்போய்த் தூற்றுகிறார்களே,' என்று பேசுகிறார்கள்; 'அதுவே போதும், தி. மு. கழகத்தைச் சாய்க்க' என்று கருதுகிறார்கள். யார், இந்தக் காமராசர்? 'தமிழில் ஒரு நிலையை விளக்குவதற்குப் பயன்படும் ஒருவரைப் போய் இவர்கள் பிடித்தார்களே, ஐயோ!' என்றுதான் நாம் கவலைப்படுகிறோம்."

திருத்தம்

9-6-56-ல் வெளியான 'நம் நாடு' இதழில், தோழியர் சத்தியவாணிமுத்து பெற்ற பட்டத்தைப் பற்றி வெளியான செய்தியை கீழ்க்கண்டவாறு திருத்தி வாசிக்கவும்.

டாக்டர் சத்தியவாணிமுத்து
M. D. (I. H.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.